இது நினைவுமலரல்ல.......




மனிதவாழ்வு என்னும் மாலையில்
உலர்ந்தமலர்
ஆனால்
உள்ளத்திலிருந்து உதிர்ந்த மலரல்ல

உ

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

பிரபல வர்த்தகர்

உயர்திரு.

# தம்பிராசா புவனேஸ்வரன்

(பவா) அவர்களுடைய


# காலத்தின் பதிவு

★

12 - 12 - 1994



எமக்கு எல்லாமாக விளங்கி, எம்மைப்
பிரிந்த எமது குடும்பத் தலைவனின்
திருவடித் தாமரைகளுக்கு இந்நூல்
சமர்ப்பணம்.



## தம்பிராசா புவனேஸ்வரன் (பவா) அவர்கள்

ஊற்றாக:
**27 - 11 - 1948**

காற்றாக:
**12 - 11 - 1994**

### திதிநிர்ணயப் பாடல்

(விருத்தம்)

மண்டாயுங் கார்மேகம் மழையாகும் ஐப்பசியில்
கண்ணாயும் பூர்வபக்கத் தசமீயெனுந் திதியதனில்
விண்பாயும் புகழுடையான் விறல்புவனேஸ் வரனவனும்
பெண்ணோயுஞ் சடையுடையான் பதமலரிற் படர்ந்தானே.

# வாடாத மலர்கள்

மலர் 1

## உ
## எல்லோரும் போற்றும் உத்தமன்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை" என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

வள்ளுவர் வாக்குக்கமைய திடீரென்று மறைந்து இறைவனோடு கலந்தவர் திரு. தம்பிராசா புவனேஸ்வரன் அவர்களது திடீர் இழப்பினை யாராலுமே தாங்கமுடியாது. தினமும் இசையால் இறைவனைப்பாடி அர்ச்சித்த ஆத்மா இன்று அகன்று விட்டது. சிரித்து, மகிழ்ந்து, உபசரிக்கின்ற உள்ளங்கள் இன்று கண்ணீர் வடிக்கின்றன. பிறந்த ஊருக்கு உத்தமனாக ஊரிலே இருந்து, வெளிநாட்டு மோகமின்றி, உறவினர்களோடு உண்டு மகிழ்ந்து உறவாடி வாழ்ந்தவர்.

ஊரில் எல்லோரும் மிகப் போற்றக் கூடியவராக வாழ்ந்தார். எல்லோரும் இவரை 'பபா' என இன்முகத்துடன் அழைப்பார்கள். மனித நேயம் மனிதத்தன்மை பொதிந்த எளிமையாக எம்மத்தியில் வாழ்ந்து காட்டியுள்ளார். அமைதியான சுபாவம் எவரையும் கவரும் கனி

வான பேச்சு யாருக்கும் தகைமை பாராது உதவும் பண்பு மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கு ஆகிய அரும் குணங்கள் அமைந்த ஒரு வராகவே வாழ்ந்தவர்.

வாழும் வயதில் வகுத்தவன் வழியை மாற்றி அமைதியாக ஆண்டவன் அழைத்து விட்டான். ஒரு படி ஜனனம் மறுபடி மரணம் வாழ்வில் நிச்சயம் மரணம் எல்லோருக்கும் உரியது.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" என்பது யோகர் சுவாமிகளின் அருள்வாக்கு. இங்கு நினைவு கூரத்தக்கது.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி அ. முத்துக்குமாரசாமி
அதிபர்
3-12-94 யா/அளவெட்டி ஞானோதயவித்தியாலயம்

உ

# நீங்காத நினைவுகள்

கடந்த ஒக்ரோபர் 13ஆந் திகதி என் காதுகளில் விழுந்த செய்தி ஒன்று என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தி அரை நிமிடம் உறைய வைத்தது. "பபா" காலமாகி விட்டார் என்ற செய்தியை என் காதுகள் நம்பமறுத்தன. கனிவும், புன்சிரிப்பும். கலகலப்பான பேச்சும் கொண்ட அழகிய தோற்றத்தைக் காலன் கவர்ந்த செய்தியை எவராலும் ஜீரணித்திருக்க முடியாது.

அன்புத் தாயின் அரவணைப்பில் செல்வ மகனாய்ச் சீருடன் வளர்ந்து அன்னை அழைத்தபடி "பபா" என்ற செல்லப்பெயரால் அனைவராலும் அழைக்கப்பட்ட "புவனேஸ்வரன்" புன்னகை மிளிரும் தண்ணொளி முகத்துடன் மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்த காட்சி என் நெஞ்சத்து வேதனையைப் பன்மடங்காய்ப் பெருக்கியது.

உற்றார், உறவினர், அயலவர். நண்பர்கள் அனைவரினதும் நன்மை தீமைகளில் பங்குபற்றித் தன் முழுப் பங்களிப்பையும் நல்கும் அவரது ஒப்பற்ற பண்பாடு பலரும் அறிந்த ஒன்று. ஏழை எளியோரை ஆதரிக்கும் பொற்குணமும், மற்றவரை மதித்துக் கௌரவித்து விருந்தோம்பும் உயர் பண்பும் கொண்ட ஒருவர் நம்மிடையே இன்று இல்லை என்பது மிகுந்த வேதனை தருவதாக உள்ளது.

உருவத்தில் ஏதோ ஒற்றுமை கண்டு என்னையும் அவரையும் சகோதரர்களா என்று பலர் கேட்பது உண்டு அதை மகிழ்வுடன் என்னிடம் அவர் கூறும் போதெல்லாம், கூடப் பிறக்காதபோதும் ஓர் சகோதரபாசத்தை, ஆதங்கத்தை அவரிடம் நான் உணர்ந்ததுமுண்டு. ஸ்கந்தவரோதயாவின் பழைய மாணவனான "புவனேஸ்வரன்"

கல்லூரித் தாய் மீதும் தனியான பற்றுதல் கொண்டவர் ஸ்கந்தாவின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை எந்நேரமும் வழங்கத் தயாராகத் தான் இருப்பதாக என்னிடம் அவர் பலமுறை உரைத்ததுண்டு.

சமூக சேவையில் அவர் இயல்பாகக்கொண்ட தாகம் இத்துடன் நின்று விடவில்லை. ஆலயங்களில் அவர்தம் அர்ப்பணிப்புகளும் நினைவில் பசுமையாய் இன்றும் காட்சியளிக்கின்றன. உடுவில் மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் மகோற்சவ காலத்திருவிழா ஒன்றினை மகோன்னத முறையில் அவர் நடாத்தி வைக்கும் பாங்கும், பொலிவும் இன்றும் என் மனக்கண் முன் ஊஞ்சலாடுகிறது.

இத்தகைய பெருமைகள் பற்பல கொண்ட "பபா" தன் இறுதி யாத்திரையை ஆரம்பித்த போது கூடி நின்று கண்ணீர் வடித்த கூட்டத்தைப் பார்த்ததும் அவருடைய திருமண நாள் என் நினைவிற்கு வந்தது. ஊரே திரண்டு வந்து வாழ்த்துச் சொல்ல, ஓர் ஒப்பரிய திருமண விழாவாக ஆரம்பித்த அந்தத்திருமண வாழ்வை இத்தனை விரைவில் முடித்துக்கொண்டு அவர் தன் இறையுலக வாழ்க்கையை ஆரம்பித்து விட்டார்.

அன்னை மீனாட்சியே! அவர் தம் மனைவி மக்களுக்கு ஆறுதலை வழங்கி அவரை உந்தன் பாதார விந்தங்களில் அடைக்கலமாய் ஏற்றுக்கொள்ளும் என இறைஞ்சுகின்றேன்.

க. சிவாஜி
ஆசிரியர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# நெருங்கியோர் நினைவலைகள்

அலை 1

## என்னவரை நினைந்து ....

என் அன்பே? அன்றொருநாட் காலை எட்டுமணியளவில் வைத்தியசாலைக்குப் போகிறேனென என்னிடம் விடைபெற்றுச் சென்றீர்கள் செல்லும்போது சிறுமகனையும் அருகணைத்துக் கூட்டிச் சென்றீர்கள், இரண்டு மணிவரை சென்ற வழியை நோக்கியபடியே இருந்தேன். மாலை ஐந்து மணியளவில் மகனவன் வைத்தியசாலைக்கு வந்த போது, 'ஏன் தூரத்தில் நிற்கிறாய் கிட்டவா! உனக்குப் பயமாக இருக்கிறதோ? எனக்கு நல்ல சுகம் வீட்டில் லக்ஷுமி படம் விழுந்து உடைந்தது. நீ தெருவில் செல்லும்போது கவனமாகச் செல் என்று வழியனுப்பி வைத்தீர்கள். காலை ஆறுமணிக்கு மகனுடன் வைத்தியசாலைக்கு வருவதற்கு ஆயத்தஞ் செய்தேன் அதற்கு முன் நாலு மணியளவில் ''ஐயோ அப்பா இறந்து விட்டாரடா'' என்ற அவலக்குரல் கேட்டது. மனம் ஏங்கினேன், நிலை தடுமாறினேன் அதிர்ச்சி அடைந்தேன், அதிகாலை ஐந்து மணியளவில் மீளாத் துயில்கொண்டு வீட்டுக்கு வந்தீர்கள். பிற்பகல் நாலரை மணியளவில் உங்கள் உடம்பு உங்கள் இல்லத்தைவிட்டு நகரத்தொடங்கியது. ''ஆடும் வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம் கூடிவரும் கூட்டம் கொள்ளி வரை'' வந்தது ஏன்? இது கனவா! இது என்ன சோதனை? ஏன் இப்படி நடந்தது? ''ஆனந்தம் விளையாடும் வீட்டில் ஐந்து அன்றில்கள் ஒன்றான கூட்டில்'' நீங்கள் வாழ்வதற்கு ஆண்டவன், அனுமதி கொடுக்கவில்லையா? ''அன்பு நடமாடும் கலைக்கூடம்'' எங்கே? ''ஆசை மழை மேகமே! கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே!'' லக்ஷுமி என்ற உங்கள் அன்பான சொல்லை எப்போ கேட்பேன்?

பிரதா, தீபா, பிரணா என்ற இனிய மொழி எப்போ கேட்பேன்? ''கடவுள் பக்தியப்பா. உமக்கு விரைவில் முத்தி கிடைக்கப் போகிறது போலும். அப்படி ஏதாவது நடந்தால் நானும் உடனே இறந்துவிடுவேன்'' என்று சொன்ன உள்ளம் எங்கே? இவற்றை எல்லாம் நினைத்தா ஆண்டவன் உங்களை முன் அழைத்தான். பாதியிலே உங்களை அழைத்த நோக்கம் என்ன? வீடு வரை உறவு வீதி வரை மனைவி காடுவரைபிள்ளை கடைசிவரை யாரோ? அவர் தான், அவரே தான் மனைவி பிள்ளைகளின் பாசத்தைவிட மேலான ஒரு நல்ல இடத்தைத்தந்து உங்களை அழைத்திருக்கின்றார்போலும்! நீங்கள் மரணப்படுக்கையில் வீட்டிற்கு வந்த போது இருந்த உங்களின் முக மலர்ச்சி ஆன்ம ஈடேற்றத்தைக் காட்டுகிறது. நீங்கள் ஒரு தெய்வம். இந்த வீட்டின் நிகழ்வு யாவும் உங்கள் செயலே! உங்களின் ஆத்மா விரைவில் சாந்தி அடையும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் உயிருடன் சேர்ந்த உருவநிழல் என்கனவிலே வந்து மலரட்டும். எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை வேண்டுகின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
வழி காணத்துடிக்கும்
**அன்பு மனைவி**

உ

# எம்பிதாவைத்தேடி !!!!

எம்உயிருக்கு உயிரான அப்பா! எங்களைச் செல்லமாக வளர்த்தது என்? பாதியிலே பிரிந்தீர்கள் எங்களை ஒரே தடவையாகப் பிரியாமல், முதல் எங்கள் அம்மாவைப் பிரிந்து, எங்களை வைத்தியசாலையிலே பிரிந்து, முடிவில் உங்களையே பிரித்து விட்டீர்கள். அம்மாவின் தாலியையும், பூவையும், பொட்டையும் பறிக்கும் நேரம் அணுகிவிட்டது என்ற கவலையிலா அம்மாவை அழைத்தீர்கள்? அல்லது எங்களுக்கு ஆறுதல் சொல்வதற்கா? கொடூரநோய் உங்களைப் பெரும் வேதனைக்குள்ளாக்கியதா? ஒரு மணித்தியாலத்துக்குள் உங்கள் சாவை எப்படி ஏற்றுக்கொண்டீர்கள்?

நாங்கள் எந்த ஒரு பொருட்களை ஆசையாக மனதில் நினைக்கின்றோமோ, அந்தப்பொருட்களை நாங்கள் கேட்காமலே வாங்கித் தந்தீர்கள் அப்பா. நாங்கள் கல்லூரியால் வரும் நேரம் இரண்டு நிமிடம் பிந்தினாலே துடித்துக் கொண்டிருப்பீர்கள் அப்பா. எங்களின் குரல் கேட்டதும் உங்களின் மனதிலே நிம்மதிதோன்றும். எங்களின் பிறந்த நாட்களை எல்லாம் எங்கிருந்து கொண்டாடப்போகிறீர்கள்? எல்லோருக்கும் நல்லவராய், எங்களுக்கு இல்லாதவராய்ச் சென்று விட்டீர்களே! நீங்கள் இருந்த இல்லம் உங்களின் உருவநிழலை வரவேற்கின்றது உங்களின் இலவசசேவை எல்லாம் அடுத்த பிறவிக்கா பலனளிக்கும்? எங்களின் மேல் வைத்த பாசம்போல், எல்லோர் மீதும் வைத்தீர்களே! அதை, ஆண்களின் கண்கள்கூடக் காட்டிவிட்டன.

நாங்கள் படும் வேதனை கட்டுமீறி விட்டது. நீங்கள் காட்டிய பாதையிலே சென்று முன்னேறிடுவோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்.


உங்கள் பிரிவால் வாடும்

**பு. பிரதாபன்**
**பு. பிரநிபா**
**பு. பிரகாசன்**

# மண்ணுலக வாழ்வைவிட்டு விண்ணுலக வாழ்வுசென்ற பபாவிற்கு ஓர் மடல்

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.''

நேற்று உயிரோடு இருந்த ஒருவர், இன்றைக்கு உயிரோடு இல்லை என்கின்ற பெருமை உடையது. என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். ஆம் உண்மை. நேற்றுவரை எங்களுடன் ஒட்டி, உறவாடி உளம் மகிழ்ந்து சிரித்துப்பேசி மகிழ்ந்திருந்த நீ, இன்று எங்கோ வெகு தொலைவில் இருந்து-சூன்யத்தில் இருந்து எங்களுடன் பேசுகின்றாய் கடந்தகாலத்தை நாம் மனதில் பதிக்கின்றோம். திரும்பிப் பார்க்கின்றோம். எங்கள் குடும்பத்திற்கே ஒரு குலவிளக்காக -ஒளிக்கீற்றாக 1948 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதி வந்து பிறக்கிறாய். உடன் பிறவாச் சகோதரிக்கு மூத்த பிள்ளை ஆண்பிள்ளை என்று எல்லோருமே குதூகலிக்கின்றோம். மனமகிழ்கின்றோம். உன் அம்மா மடியில் தவழ்ந்து விளையாடிய நேரத்திலும் பார்க்க, எங்கள் மடியிலே தவழ்ந்து விளையாடிய நேரமே அதிகம் இடுப்பிலே வைத்து அழகு நிலா காட்டியும், கதைகள் பல சொல்லியும், அமுதூட்டிய நாட்களை மறக்கத்தான் முடியுமா? தோளிலே வைத்து காவடி ஆடிய நாட்களைத்தான் மறக்க முடியுமா? உன்னை முதுகிலே வைத்து உப்பு மூட்டை சுமந்தோமே! இவைகள் எல்லாம் எம் கண்முன்னே நிழலாடுகின்றனவே



வித்தியாரம்பத்தையும், ஆரம்பக்கல்வியையும் உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயத்தில் பெற்றாய். அப்போதெல்லாம் நாங்கள் தானே கொண்டு சென்றோம். அந்த நேரத்தில் நீ விரும்பியதை யெல்லாம் கேட்டதை எல்லாம் வாங்கித் தந்தோம். பின்பு மானிப் பாய் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக்கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்து கல்வியை மேற்கொண்டாய். அப்போது மோட்டார் வண்டியிற் தானே போய் வந்தாய் அதன் காரணமாக மோட்டார் வண்டி ஓடப்பழக வேண்டும் என்ற ஆசை உன்னுள் எழுந்தது. உடனே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தோம். சாரதியப்பயிற் சியை மிகத்துல்லியமாகக்கற்று, பாண்டித்தியம் பெற்று, சொந்தமா கவே வாகனங்களை வாங்குவதும் விற்பதுமாகவே இருந்தாய்.

திருமணப் பருவம் வந்தது, 1976ஆம் ஆண்டு இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இசைபயின்றவரும், கோண்டாவில் நெட்டிலிப் பாய்க் குறிச்சியைச் சேர்ந்தவரும், பொன்னுச்சாமி யோகம்மா தம்பதி களின் புத்திரியுமாகிய தெய்வமகளாம் இலட்சுமிதேவியைத் திருமணம் செய்து வைத்துக் கண்குளிரக்கண்டோம் இல்லறத்தின் நல்லறமாய் பிரதாபன், பிரதீபா, பிரகாசன் என்கின்ற பெயர்களை உடைய பிள்ளைச்செல்வங்களைப் பெற்று,, நீயும் மகிழ்ந்து எங்களையும் மகிழ்வித்தாய்.

உயிருக்கு உயிரான எம் பவா! ''தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை'' என்பார்கள், உன் அம்மாவைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றித், துதித்து பூஜித்து வந்தாய். கைப்பிடித்தவளைக் கண் ணின் மணிபோலப் பேணிவந்தாய். பிள்ளைச் செல்வங்களுக்கு எவை யெவை எந்தெந்த நேரத்தில் தேவையோ அவைகளை அந்த நேரத்தில் வாங்கிக்கொடுத்து மகிழ்வித்தாய். நாங்கள் கடை கண்ணி அறியோம், சந்தையறியோம், எங்களுக்கு வேண்டியவற் றையெல்லாம், வேண்டிய நேரத்தில் வாங்கித்தந்து உதவிசெய்தாய். இனி யாம் யாரைக் கேட்பது? உற்றார், உறவினர்க்கு, சமூகத்திற்கு வேண்டிய உதவிகளைச்செய்து கொடுத்தாயே. உனது இளைய மாமா தபாலதிபர் திருநாவுக்கரசு இப்போ லண்டனில் உள்ளார். அவர் போகும் பொழுது சொன்னாயே ''மாமா! நீங்கள் இப்போ போகிறீர்கள். திரும்பி வரும்பொழுது என்னைக் காண்பீர்களோ தெரியாது'' என்று வாயோரியாகச் சொன்னாயே அதை இப்போ மெய்யாக்கி விட்டு, விண்ணுலகு அரசாளப் போய்விட்டாயே. உன் மாமா கண்ணீர் பனிக்கும்படிக்குக் கடிதம் போட்டிருக்கிறானப்பா.

1994ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 12ஆந் திகதி, சடுதியாக இருதய நோயால் பாதிக்கப்பட்ட உன்னை அவசர அவசரமாக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். ஆனால் அங்கே...... எல்லாமே அடங்கி விட்டது. அந்தோ! கட்டிய மனைவி அழ, பெற்ற பிள்ளைகள் கதற, நாங்கள் எல்லாம் குழற, உன் ஆவி உடலை

விட்டுப் பிரிந்து எங்கோ வெகு தொலைவிற்கு கண்காணாத இடத்திற்கு போய்விட்டது. பூஜ்ஜியத்திற்குள் புகுந்து விட்டது. கடைசி நேரத்திலே வைத்தியசாலையிலே, உன் சித்தப்பாவை அழைத்து இளையமகனை அவர்தம் கையிலே கொடுத்து: இவனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினாயே! எம் இதயமே அந்த நேரத்தில் அதிர்ந்தது: உன் சின்னம்மாவோ. ஆசையம்மாவோ பக்கத்தில் இல்லை. பாவிகளானோம். கடைசி நேரத்தில் ஒரு மிடறு பால் பருக்கக்கூடக் கொடுத்துவைக்காத பாவிகளானோம்.

பவா!

வான் தந்த மின்னலைப் போல் நீ வந்து போய் விட்டாய் சிறப்பாய் நீ வாழ்ந்து, எங்களையெல்லாம் இனிப்பாக வைப்பாய் என்று மனத்தினில் நினைத்திருந்தோம். நீ இறப்பாய்என்று நாம் கனவிலும் கண்டதில்லை துன்பங்கள் எம்மைச் சூழ்ந்து வாட்டிய நாட்களிலும் இன்பங்கள் எம்மனதில் இனித்திட்ட நாட்களிலும் உன் பங்கு எங்களுடன் என்று இருந்தோமே கல்மனங் கொண்டு எங்களுடன் எக்காலமும் இருந்தாய் அல்லை. நல்மனம் கொண்டுதானே வாழ்ந்து வந்தாய். இன்றைக்கு நீயோ இல்லை நாம் சாந்தியை இழந்து விட்டோம். இன்றைக்கு நீ போய் விட்டாய் அமைதியை இழந்து விட்டோம். இன்றைக்கு உன்னைக் காணோம். அன்பினை இழந்து விட்டோம் இன்றைக்கு உன்னை இழந்து எல்லாமே இழந்து விட்டோமடா.

நீ ஒரு பத்தரை மாற்றுத் தங்கமப்பா! கனவிலாகுதல் வந்து எங்களுடன் கதை. அப்பொழுதாகிலும் உன் பொன்னொளிர் வதனப் புன்னகையை, முத்துப்பல்லழகை அழகுத் திருமேனியைக் கண்ணாரப் பருகி, மனதாரநினைந்து களித்து நிற்போமடா.

அதிகம் எழுதி என்ன? எமக்கு நீ செய்யத்தக்க கடனெலாம். ஏங்கி, ஏங்கி உமக்கு யாம் செய்யலுற்றோம். இதை யெல்லாம் சூன்யத்துள் இருந்து பார்த்துக்கொண்டுதானேயிருப்பாய்
பவா!

ஒன்று மாத்திரம் நிச்சயம். அயன் (பிரமன்) எழுத்தை ஆண்டாண்டு தோறும் அழுது வரும் கண்ணீராலும் அழிக்க முடியாது. "வையகத்தில் பிறப்புளதேல், இறப்புமுண்டு. மாற்றுதற்கரிய விதி இது" என்றுணர்ந்து தேறுகின்றோம்.

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்:

**சித்தப்பா + சின்னம்மா**
**(அமரசிங்கம் + சுகிர்தம்)**

**ஆசையப்பா + ஆசையம்மா**
(பரராசசிங்கம் + கனகேஸ்வரி)

உ

# எல்லோருக்கும் இனியர்

சிவந்தமேனி; அழகிய தோற்றம்? கலகலப்பான பேச்சு, இவர் தான் பபா அல்லது பபா அண்ணை என்று உறவினர்களாலும் நண்பர்களாலும் அழைக்கப்பட்ட அமரர் தம்பிராசா புவனேஸ்வரன்.

பிரபல வர்த்தகரான இவர் தாய், தந்தையருக்கு ஒரே பிள்ளை. சிறுவயது முதல் செல்லமாகவளர்ந்தவர் தன் வியாபாரத் தொடர்பு களினாலும் அன்புகனிந்த பேச்சினாலும் நிறைந்த நண்பர் குழாத்தை கொண்டிருந்தார். அவரது இறுதி ஊர்வலத்தின்போது திரண்ட மக்கள் கூட்டமே இதற்குச் சாட்சி.

உறவினர் எல்லோருடனும் மாமா, மாமி, மச்சான், மச்சாள் என்று முறைசொல்லி அழைக்கும் பாங்கு, நகைச்சுவை கலந்தபேச்சு இதனால் உறவினர் எல்லோருடைய அன்பையும் இவர் பெற்றிருந் தார்.

தன்னுடைய குடும்பத்தை செழிப்புடன் வைத்திருந்த இவர், புகுந்த வீட்டிற்கும் அவ்வப்போது உதவி செய்யத் தவறவில்லை.

திடீரென்று நோய்வாய்ப்பட்டுவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார் அன்று மாலை 5 மணியளவில் எனக்குத் தகவல் தெரிவிக் கப்பட்டது. இரவு வேளையில் என்னைக் கவனிக்க மச்சான் வருவார். நீங்கள் எல்லோரும் வீடு செல்லுங்கள் என்று உறவினர்களை வழி யனுப்பி வைத்தார் நான் 7 மணியளவில் அவரைப் பார்க்கச்சென்ற போது அவரது நோய் அதிகரித்துவிட்டது. அவருடன் பேச முடிய வில்லை. அன்றிரவே அவர் இறைவன் அடிசேர்ந்தார்.

அவரது பூதவுடலை வீட்டுக்கு எடுத்துச்சென்றபோது அவரது திருமணக் கோலக்காட்சி என் மனக்கண்முன் வந்தது. 18 வருடங் களின்முன் மாப்பிள்ளைத் தோழனாக அவரை அழைத்துச்சென்ற நான் இவ்வளவு சீக்கிரத்தில் இரவு வேளையில் அவரது பூதவுடலை தனியே வீட்டுக்கு எடுத்துச்சென்றபோது என் மனதில் சோகம் கவ்வி நெஞ்சு விம்மியது.

பாசம் நிறைந்த அவரது பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் காணமுடியாமல் இளமையில் அவர் மறைந்தது எமக்கெல்லாம் மிகுந்த கவலையளிக்கிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

மைத்துனர் பொ. மகேஸ்வரன்

உ

# இங்கிலாந்திலிருந்து இம்மடல்

லண்டன்
23-11-94

அன்பின் லக்ஷ்மி, பிராதப் தீபா, பிரணா அறிவது 17ஆம் திகதி பின்னேரம்போல் இந்தத் துக்ககரமான செய்தியை மாணிக்கவாசகர் சொன்னார். எங்களுக்கு நம்பவே முடியவில்லை. வேறு யாரையோ மாறிச்சொல்லி விட்டார் என்பதுபோல் நம்பிக்கை. திரும்பவும் மாணிக்க வாசகருடன் தொலைபேசியில் கதைத்தோம். எல்லாம் விபரமாக அறிந்தோம். ஏன் இப்படி நடந்தது. பவா தனது உடம்பில் கவனமில்லை என்று பாண்டுரங்கன் அத்தான் சொன்னவர். முன்பும் ஒருமுறை இதேபோல் வந்ததாகவும் சொன்னார். கடவுளே ஏன் இப்படி இந்த வயதிலே நடக்கவேண்டும். ஐயோ கடவுளே இப்பதான் கலியாணவீடு நடந்த காட்சிகள் மனதிலே நினைக்க வருகிறது. பிரதாபனும், பிரகாசனும் சிறுவயதில் தகப்பனுக்கு கடமை செய்யும் காட்சியை நினைத்தாலே தாங்கமுடியவில்லை. எப்படித்தான் இவற்றை எல்லாம் பார்த்து செய்து முடித்தீர்களோ தெரியாது. எந்த ஒரு காரியத்தையும் சிரித்துக்கொண்டு முன்நின்று செய்யும் பவா இன்று இல்லையே! அவனின் ஆத்மா சாந்தியடைய துர்க்கா தேவியை வேண்டுகின்றோம்.

திரு. திருமதி ம. திருநாவுக்கரசு
(சின்னமாமா — மாமி)

# எங்கள் அருமைச் சித்தப்பா

சித்தப்பா என்றழைப்போம் — இனி
உங்கள் சிரித்தமுகம் காண்பதெப்போ?
வாடிய முகத்தினளாய் சித்தியும் வருந்தி நிற்க
நோய் ஒன்று உங்களை நொடியினிற் கொண்டு சென்றதுமேன்?
உற்ற நேரத்திலே உதவிக்கரம் நீட்டியே
உழைத்த எங்கள் சித்தப்பா
உங்கள் பிரிவைச் சொல்லாது போனதேனோ
உற்றதொரு பிதாவினையே பிரிந்ததைப் போல்
உருக்குலைந்து நிற்கின்றோம் உங்கள் பிரிவால்
அன்று ஒருநாள் எம்முடன் அன்பாகக் கதைத்ததுவும் சிரித்ததுவும்
இன்றுபோல் எம்நினைவில் நிற்கிறதே சித்தப்பா
வாடும் மலரல்லவே உங்கள் வதனம்
இனியபேச்சும் உங்கள் உண்மை அன்பும்
இனி எம் வாழ்வில் மறக்கமுடியாத நினைவலைகள் ........
சித்தப்பா என்றழைக்க இங்கு ஏங்கிடும் உள்ளங்கள்
அப்பா என்றழைத்துப் பரிதவிக்கும் பிள்ளைகள்
'பவா' என்றழைக்கும் உறவினர் நண்பர்கள்
உங்களைக் காணவிரைந்தபோது
பாரில் உங்கள் வாழ்வு வாழ்ந்தது போதுமென்று
பரமன் அடியினைப் பற்றிக் கொண்டீர்களோ
செய்திகேட்டு ஓடிவந்தோம் சென்றுவிட்டீர்கள்
உங்கள் முகம் கண்டோம் சித்தப்பா மலர்ந்தபடி
உங்கள் வாடியமுகம் எம்மை ஏங்கி அழச்
செய்திடும் என்றோ சிரித்தபடி துயின்றீர்கள்
காணச் சகிக்கவில்லை
கண்ணுக்குள் நின்று கள்ளமின்றிச் சிரிக்கின்றீர்கள்
பற்று வைத்த உள்ளங்கள் பாசத்தால் ஏங்கிடவே
எங்கள் அருமைச் சித்தப்பா எங்கே நீங்கள் சென்றீர்கள்?

உங்கள் நினைவுடன்
**பேறாமக்கள்**

தொகுப்பு:
**உடுவில் அரவிந்தன்**

உ
சிவமயம்

# தோத்திரப் பாமாலை

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னை யையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே,

## திருவாசகம்

பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் தித்துக்குந் தேனே

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம் பெருக்கி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறு துமே.

## பெரியபுராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் னடியின்கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணையோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## உதவிக்கரங்களுக்கு ....


எங்கள்
குடும்பத்தலைவன்
மறைந்த போது உடனிருந்து,
ஆறுதலளித்து உதவி புரிந்த உறவினர்,
அயலவர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில்
சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தோருக்கும்,
அன்னாருக்கு இறுதி அஞ்சலி செய்த அதிபர்,
ஆசிரியர்களுக்கும், மற்றும் இம்மலரை
அழகாக அச்சிட்ட ''நீரஜா''
அச்சகத்தினருக்கும்
எமது




டச்வீதி,
உடுவில்.
12-12-1994

மனைவி, பிள்ளைகள்

# வம்சாவழி


மயில்வாகனம்
+
நாகம்மா
சின்னப்பு
+
சுந்தரம்
(சகோதரிகள்)
வைத்திலிங்கம்
+
வள்ளிப்பிள்ளை
பராசக்தி
சதாசிவம்
+
பூமணி
தம்பிராசா
செல்லையா
+
நாகேஸ்வரி
புவனேஸ்வரன்
சற்குணலீலாவதி
+
இராசரத்தினம்
மகேஸ்வரன்
+
பரமேஸ்வரி
பிரதாபன்
(யாழ் இந்துக்கல்லூரி)
பிரதீபா
நவரட்ணம்
+
இந்திராதேவி
தர்மராஜா
+
சாரதாதேவி
சுகிர்தமலர்
+
அமரசிங்கம்
கனகேஸ்வரி
+
பராசசிங்கம்

## வம்சாவழி

...திலிங்கம்
+
...ப்பிள்ளை

...சா

செல்லையா
+
நாகேஸ்வரி

அழகரத்தினம்
+
பரமேஸ்வரி

அன்னம்மா
+
இரத்தினம்

புவனேந்திரன்
+
மகேஸ்வரி

விஜயசிங்கம்
+
சரோஜினிதேவி

பொன்னுச்சாமி
+
யோகம்மா

...வதி
...ம்

மகேஸ்வரன்
+
பரமேஸ்வரி

சரோஜினிதேவி
+
பாலகிருஷ்ணன்

இலட்சுமிதேவி

சந்திராதேவி
+
புண்ணியானந்தம்

சகுந்தலாதேவி
+
தர்மகுலசிங்கம்

ஜெமீலாதேவி
+
சுந்தரராஜா

பிரதீபா
(உடுவில் மகளிர் கல்லூரி)

பிரகாசன்
(உடுவில் மகளிர் கல்லூரி)

...கேஸ்வரி
+
...ராசசிங்கம்

திருநாவுக்கரசு
+
புனிதவதி

நீரஜா அச்சகம், சுன்னாகம்.